நித்திய வாழ்வினில் நித்திரை கொள்பவன்
செத்திடப் போவதில்லை
எங்கள் த்த்துவ மேதையும் செத்துவிட்டான் என
கத்திட போவதில்லை (2)
பாவி எமன் உத்தரவில் பால அண்ணன் நித்திரையில் (2)
கூவும் குரல் வன்னியினிலே கேட்டிடுமோ
லண்டனிலே(2)
(நித்திய வாழ்வினில்)

தாய் நிலத்தை தோழ்களிலே தாங்கி
நின்று நீ சிரித்தாய்
தம்பியுடன் சேர்ந்திருந்து சந்தனமாய்
நீ கரைந்தாய்(2)
வாய் எடுத்து பேசவெனில் வார்த்தை
வர இல்லை ஐயா
வந்து உன்னை காண்பதற்கும் இங்கு
வழி இல்லை ஐயா
அண்ணனே பாலா அண்ணானே இது அழுது தீருமோ
கண்களில் வழிகின்றதே இந்த துயரம்
மாறுமோ(2)

ஆசை பெரிதேதுமின்றி அன்ரியுடன்
வாழ்ந்திருந்தாய்
அச்சமின்றி நீ இருந்து அண்ணனுக்கு கை கொடுத்தாந்(2)
பேச என வந்தவரின் பொய் முகத்தை
நீ கிழித்தாய்
பேச்சடங்கி போய் உறங்கும்
பாயினிலும் நீ சிரிப்பாய்
அண்ணானே பாலா அண்ணனே இது அழுது தீருமோ
கண்களில் வழிகின்றதே இந்த துயரம் தீருமோ(2)
( நித்திய வாழ்வினில்)